**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No.10/2021 |
| Deposition of witness | | PW-1 /LW-1 |
| Name | | **பௌருல்ரகுமான்** |
| Father’s/Husband Name | | **அபுபைதா** |
| Village | | **மதுக்கூர்** |
| Taluk | | **பட்டுக்கோட்டை** |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 25th day of September 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் மதுக்கூர் மெயின்ரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் ஸ்டிக்கர் கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும் மற்றும் இந்த வழக்கில் இறந்துபோன 2வது எதிரி செங்குட்டுவனை தெரியும். அனைவரும் எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள். சுமார் 14 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2010-ம் ஆண்டு மாலை 06.30 மணியளவில் எங்கள் ஊர் சிரமேல்குடி ரோட்டில் சென்றுகொண்டிருந்த போது விநாயகர் ஊர்வலம் வந்து கொண்டிருந்தது அப்போதுஒரே கூட்டமாக இருந்தது. அதில் யாரோ என்னை சத்தம் போட்டுக்கொண்டே பின்னால் இருந்து தள்ளிவிட்டார்கள். அதில் நான் கீழே விழுந்துவிட்டேன். என்னை பின்னால் இருந்து தள்ளியதாலும், நான் எழுந்து திரும்பி பார்ப்பதற்குள் ஓடிவிட்டதால் யார் தள்ளினார்கள் எதற்கு தள்ளினார்கள் என்று எங்களுக்கு தெரியாது. இது சம்பந்தமாக மதுக்கூர் காவல் நிலையம் சென்றேன். அங்கு போலிசார் எழுதி வைத்திருந்த பேப்பரில் கையெப்பம் மட்டும் பெற்றுக்கொண்டார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, படித்து பார்க்காமால் கையெழுத்து போட்டேன், என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில்

கையெழுத்து மட்டும் என்னுடையது, அந்த கையெழுத்து **அசாஆ1** ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் 19.09.2010அன்று மாலை 06.30மணியளவில் நான் என் உறவினர் வீட்டிற்கு சிரமேல்குடி ரோட்டில் சென்றுகொண்டிருந்த போது வந்த விநாயகர் ஊர்வலத்தில் ஆஜர் எதிரிகள் மற்றும் இறந்து போன எதிரி செங்குட்டுவன் என்னை பார்த்து தேவடியா மவனே, குச்சிக்காரி மவனே உனக்கு என்னடா இங்கு வேலை என்று திட்டினார்கள் என்றும், கருங்கற்களை எடுத்து என் மீது சரமாரியாக வீசி மத கலவரத்தை உண்டு பண்ணும் விதத்தில் இழிவுபடுத்தும் வகையில் திட்டினார் எனவும், ஊர்வலம் முடிந்தவுடன் உன்னை கொளுத்துகிறேன் என்று மிரட்டினார் என்றும், இந்த சம்பவம் உறபீர் ராவுத்தர்ஷா, ராஜா முகம்மது மற்றும் சிலருக்கு தெரியும் என்றும், நான் இது சம்மந்தமாக மதுக்கூர் காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன் என்றும், இந்த புகார் மனு தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுவது தான் என்றும், அது குறித்து போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரிகள் தெரிந்த நபர்கள் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரிகளை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- என்.அழகேசன்,<br>
குற்றவியல் நீதித்துறை நடுவர்,<br>
பட்டுக்கோட்டை.